பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
02 07 2024 **TUESDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பொதுத்துறை, தனியார் துறை பங்கேற்பின் மூலம் நீடித்த பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இந்திய குடிமைப்பணிக்கான முதல்நிலைத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.
- பாகிஸ்தானில் உள்ள மீனவர்கள் உட்பட இந்திய கைதிகளை விரைவில் விடுவிக்குமாறு அந்நாட்டு அரசை மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.
- ராஜஸ்தான் மாநிலம், **Karauli** மாவட்டத்தில் நேரிட்ட சாலை விபத்தில் ஒன்பது பேர் உயிரிழந்தனர்,
- யூரோ கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் போர்ச்சுக்கல் மற்றும் பிரான்ஸ் அணிகள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

>>>><<<<

பொதுத்துறை, தனியார் துறை பங்கேற்பின் மூலம் நீடித்த பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என்று மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

தொழில் முனைவோர், தொழிற்சங்க பிரதிநிதிகள், ஏற்றுமதி மேம்பாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோருடன் மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் மேற்கொண்ட கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற போது அவர் இதனை தெரிவித்தார்.

அப்போது பேசிய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வணிக வளர்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கான மத்திய அரசின் உறுதிப்பாடுகளை எடுத்துரைத்தார்.

தொழில்துறை எதிர்கொள்ளும் சவால்களை அறிந்து கொள்ளவும், கொள்கை உருவாக்கத்தில் அவர்களுடைய ஆலோசனைகளை சேர்க்கவும் இத்தகைய கலந்துரையாடல் நிகழ்ச்சி அவசியமானது என்று திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் விண்வெளி, தகவல் தொழில்நுட்பம், தோல் மற்றும் காலணிகள் தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு புத்தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

>>>><<<<

கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழி போக்குவரத்து துறையினருடன் அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனையில் ஈடுபட்டார்.

இக்கூட்டத்தில் பேசிய அவர், நாட்டை கட்டமைப்பதற்கான பரிந்துரைகளையும், ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தை மேம்படுத்தவும், பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கவும், உலகத்தரம் வாய்ந்த கடல்சார் மற்றும் உள்நாட்டு நீர்வழி கட்டமைப்புகளை உருவாக்க தமது அமைச்சகம் உறுதிபூண்டுள்ளதாக திரு. சர்பானந்த சோனோவால் கூறினார்.

>>>><<<<

இந்திய குடிமைப்பணிக்கான முதல்நிலைத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

குடிமைப்பணி தேர்வின் அனைத்து நடைமுறைகளும் நிறைவடைந்த பிறகும், இந்திய வனப்பணி தேர்வு முடிவடைந்து இறுதித்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட பிறகும், மாணவர்களின் மதிப்பெண்கள், கட்ஆஃப் மதிப்பெண்கள், விடைக்குறிப்பு ஆகியவை மத்திய குடிமைப்பணிகள் தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல்நிலை தேர்வில் தேர்ச்சியடைந்தவர்கள் பிரதான தேர்வுக்கு **DAF-I** விண்ணப்பம் மூலம், மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அதற்கான தேதி மற்றும் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் ஆகியவை தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

தேசிய தேர்வு முகமை நடத்தும் தேர்வில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து பெற்றோரும், மாணவர்களும் கருத்து தெரிவிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், தேர்வு குறித்த கருத்துக்கள், ஆலோசனைகள் ஆகியவற்றை டாக்டர். கே. ராதாகிருஷ்ணன் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள உயர்நிலை குழுவிற்கு தெரிவிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளது.

தேசிய தேர்வு முகமை சார்பில் நடத்தப்படும் தேர்வில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள், தரவுகளை பாதுகாப்பதில் செய்ய வேண்டிய மேம்பாடு, தேசிய தேர்வு முகமையின் பணிகள் தொடர்பாக பெற்றோரும், மாணவர்களும் இம்மாதம் 7ஆம் தேதிக்குள் தங்களது கருத்துக்களை உயர்நிலைக் குழுவிடம் தெரிவிக்கலாம் என்று தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

>>>><<<<

பாகிஸ்தானில் உள்ள இந்திய கைதிகள், மீனவர்கள் மற்றும் அவர்களுடைய படகுகளை விரைவில் விடுவிக்க வேண்டும் என்று அந்நாட்டு அரசை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இருதரப்பிலும் உள்ள கைதிகளின் பட்டியலை பரிமாறிக் கொண்டபோது, மத்திய அரசு இக்கோரிக்கையை விடுவித்துள்ளது.

தண்டனைக் காலம் முடிவடைந்த 185 இந்திய மீனவர்களை விரைவில் விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாகிஸ்தானைச் சேர்ந்த 86 மீனவர்கள் உட்பட 366 கைதிகள் இந்திய சிறைச்சாலைகளில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறையில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அதேபோல், 211 இந்திய மீனவர்கள் உட்பட 254 பேர் பாகிஸ்தான் சிறைகளில் உள்ளதாக அந்நாட்டு அரசு பட்டியல் வெளியிட்டுள்ளது.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக, கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 2 ஆயிரத்து 639 இந்திய மீனவர்கள் உட்பட 2 ஆயிரத்து 710 இந்தியர்கள் பாகிஸ்தானிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இருதரப்பு ஒப்பந்தத்தின்படி, ஆண்டுதோறும் ஜனவரி 1, ஜூலை 1 ஆகிய தேதிகளில் இருநாட்டிலும் உள்ள கைதிகளின் பட்டியல் வெளியிடப்படுகிறது.

**>>>><<<<**

தமிழகத்தில் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள மொபைல் உபகரண உற்பத்தி நிறுவனமான **Foxconn,** திருமணமான பெண்களை வேலையிலிருந்து நீக்குவது குறித்த புகாருக்கு பதிலளிக்குமாறு மாநில தலைமைச்செயலர், தொழிலாளர் நல அமைச்சக செயலாளர் ஆகியோருக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இதுகுறித்த தகவலை அறிந்த தேசிய மனித உரிமைகள் ஆணையம், தாமாக முன்வந்து இந்த நோட்டீஸை அனுப்பியுள்ளது.

இந்த குற்றச்சாட்டு உண்மை என கண்டறியப்பட்டால், அது சமஉரிமை, சமவாய்ப்பு ஆகியவற்றை மீறிய செயலாக கருதப்படும் என்று அந்த ஆணையம் கூறியுள்ளது.

தொழிலாளர் சட்ட விதிகள் தொடர்பான வழிமுறைகளை அனைத்து நிறுவனங்களும் பின்பற்றுவது மற்றும் தனியார் துறையில் மகளிர் உள்ளிட்ட எந்தவொரு தனிநபரின் கண்ணியம் பாதுகாக்கப்படுவது குறித்து மாநில அரசு அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும் என்று தேசிய மனித உரிமை ஆணையம் தெரிவித்துள்ளது.

**>>>><<<<**

பங்களாதேஷ் தலைநகர் டாக்கா சென்றுள்ள, கடற்படை தலைமை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி, அந்நாட்டு கடற்படை தலைமைத்தளபதி அட்மிரல் **Nazmul Hassan-**ஐ சந்தித்து பேசினார்.

கடல்சார் பகுதிகயில் இருநாடுகளின் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்து அவர்கள் விவாதித்தனர்.

முன்னதாக, பங்களாதேஷ் விடுதலைக்கான போரில் ஈடுபட்டு உயிர்த்தியாகம் செய்த வீரர்களின் நினைவிடத்தில் தினேஷ் கே திரிபாதி மரியாதை செலுத்தினார்.

**>>>><<<<**

ராணுவ துணைத்தளபதியாக லெப்டினென்ட் ஜென்ரல் **N.S. Raja Subramani** பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் 1985ஆம் ஆண்டு கார்வால் ரைஃபில்ஸ் படைப்பிரிவில் பணியில் சேர்ந்தவர் ஆவார்.

தேசிய பாதுகாப்பு கல்விக் கழகம், இந்திய ராணுவ கல்விக் கழகத்தில் இளநிலைப் பட்டம் பெற்றுள்ளார்.

இங்கிலாந்தின் **Bracknel-**ல் உள்ள ராணுவக் கல்லூரி மற்றும் புதுதில்லியில் தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் முன்னாள் மாணவர் ஆவார்.

சென்னை பல்கலைக் கழகத்தில் பாதுகாப்பு குறித்த ஆய்வில் **.N.S. Raja Subramani, M.Phil** பட்டம் பெற்றுள்ளார்.

**>>>><<<<**

அமர்நாத் புனித யாத்திரைக்கு ஜம்மு காஷ்மீரில் உள்ள பகவதிநகரிலிருந்து 6 ஆயிரத்து 537 யாத்திரிகர்கள் கொண்ட ஐந்தாவது குழு புறப்பட்டுச் சென்றது.

இவர்களில் ஆயிரத்து 102 பேர் பெண்கள் என்றும் 19 பேர் குழந்தைகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>><<<<**

ராஜஸ்தான் மாநிலம், **Karauli** மாவட்டத்தில் நேரிட்ட சாலை விபத்தில் ஒன்பது பேர் உயிரிழந்தனர், 4 பேர் காயமடைந்தனர்.

**Karauli - Mandrayal** சாலையில் நேற்று மாலை காரும் லாரியும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து நிகழ்ந்தது.

காயமடைந்தவர்களில் 3 பேர் **Karauli** மாவட்ட மருத்துவமனையிலும், கவலைக்கிடமாக உள்ள ஒருவர் ஜெய்ப்பூர் மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு. **Neelabh Saxena** எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**>>>><<<<**

மியான்மரில் கனமழை காரணமாக, **Ayeyarwady** ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதை அடுத்து, **Kachin** மாகாணத்தில் உள்ள சுமார் இரண்டாயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்கள், அங்குள்ள பள்ளிகள், தேவாலயங்கள் உள்ளிட்ட இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**Myitkyina** மற்றும் **Waingmaw** பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

**>>>><<<<**

இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு இந்தியர்கள் தொடர்ந்து, பங்களிப்பு செய்து வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இலங்கை சுற்றுலா வளர்ச்சி ஆணையம் வெளியிட்டுள்ள தரவில், இலங்கையில் கடந்த 6 மாதங்களில் 1 லட்சத்து 84 ஆயிரம் இந்திய சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் இலங்கைக்கு ஒரு லட்சத்து 13 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் சென்றதாகவும், அதில் 28 ஆயிரம் பேர் இந்தியர்கள் என்றும் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு நடப்பாண்டில் இதுவரை 10 லட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தந்ததாகவும், இது, கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தை விட 62 சதவீதம் அதிகமாகும் என்றும் இலங்கை சுற்றுலா வளர்ச்சி ஆணையம் கூறியுள்ளது.

**>>>><<<<**

உத்ராகண்ட், அஸ்ஸாம், மேகாலயா மாநிலங்களில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், உத்தரபிரதேசம், ராஜஸ்தான், பீகார் உள்ளிட்ட மாநிலங்களில் அடுத்த 4 நாட்களுக்கு தொடர்ந்து கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே, தமிழகத்தில் நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்ட மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

கேரள, கர்நாடக கடலோரப் பகுதிகள், மத்திய அரபிக்கடல் பகுதிகள், தெற்கு மற்றும் மத்திய வங்கக்கடல் பகுதிகள், அதையொட்டிய வடக்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் இன்று முதல் இரண்டு நாட்களுக்கு சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அப்பகுதிக்கு செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

>>>><<<<

யூரோ கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் போர்ச்சுக்கல் மற்றும் பிரான்ஸ் அணிகள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

ஜெர்மனியின் **Frankfurt-**ல் நடைபெற்ற இப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் போர்ச்சுக்கல் 3-0 என்ற கோல்கணக்கில் ஸ்லோவேனியாவை வென்றது.

மற்றொரு போட்டியில் பிரான்ஸ் 1-0 என்ற கோல்கணக்கில் பெல்ஜியத்தை வென்றது.

>>>><<<<

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் இந்திய வீரர் சுமித் நாகல் தோல்வியடைந்தார்.

லண்டனில் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் செர்பிய வீரர் **Miomir, 2-6, 6-3, 3-6, 4-6** என்ற செட்கணக்கில் வெற்றி பெற்றார்.

**>>>><<<<**